திருமயம் தொகுதியில் வேளாண்மைக்கு ஏற்ற காட்டுப் பகுதிகள்.

* 728 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருமயம் தொகுதியிலுள்ள காட்டுப் பகுதிகளிலிருந்து வேளாண்மை செய்வதற்கேற்ற பகுதிகள் பகுக்கப்பட்டு வருவாய் துறைக்கு மாற்றப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், எங்கெங்கு ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : (அ) & (இ) திருமயம் வட்டத்தில் மேலப்பனையூர் கிராமத்தில் உள்ள சுமார் 80 ஏக்கர் காட்டு நிலத்தை வருவாய்த் துறைக்கு மாற்றுவது பற்றிய செயற்குறிப்பு ஒன்று வனத் துறைத் தலைவரிடமும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளரிடமும் இருக்கின்றது. அது அவர்களால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேலப்பனையூர் கிராமத்தில் உள்ள காட்டு நிலங்களை வருவாய்த் துறைக்கு மாற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நச்சாம்தொட்டி, ராங்கியம் பகுதிகளில் உள்ள காட்டுப் பகுதிகளையும் வருவாய்த் துறைக்கு மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்பொழுதுள்ள செயற்குறிப்பு 80 ஏக்கர் நிலத்தை வருவாய்த் துறைக்கு மாற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படுகிறது. திருமயத்தில் உள்ள ஏனைய பகுதிகளைப் பொறுத்த வரையில் காட்டிலாகா 4-வது சட்டத்தின் கீழ் மாற்றுவதற்கு விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக அறிவிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

வாழ்க்கைத் தரப் புள்ளி.

*729 வினா—**திரு ஏ. எம். இராஜா :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேலம், கோவை, கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில், முதலிய நகரங்களில் வாழ்க்கைத் தரப் புள்ளி எண் கடந்த ஆறு மாதங்களில் முறையே எவ்வளவு புள்ளிகள் உயர்ந்துள்ளன, அல்லது இறங்கி உள்ளது ?

மாண்புமிகு திரு கா. வேழவேந்தன்: கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், நாகர்கோவில், ஆகிய இடங்களில் 1969 ஜூன் முதல் நவம்பர் மாதம் வரை உள்ள வாழ்க்கைச் செலவுப் புள்ளி விவரங்களை க்காண்பிக்கும் விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்றப் பேரவையின் முன்வைக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூருக்கான புள்ளி சேலத்திற்கும் பொருந்தும்.

Dr. H. V. HANDE : Sometime back I had asked a question whether cost of living reports have been published for the month of March especially for the City of Madras. In view of the fact that there is necessity for this cost of living index to give bonus to workers and employees, even white-collared employees, may I know whether it has been released and if so, whether there has been exorbitant increasein the cost of living in the month of March ? முற்பகல் 9-30

@ 638-639ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.